WCIC
Women's Chamber of Industry and Commerce
Engage - Empower - Enrich

In Collaboration with

USAID
FROM THE AMERICAN PEOPLE

WCIC
மேன்மைக்கு கௌரவம்
Women Entrepreneur Awards 2024
வலுவூட்டல் AIA INSURANCE

# நுழைவு கிட் மற்றும் வழிக்காட்டல்

WWW.WCICSL.LK

WCIC
Women's Chamber of Industry and Commerce
Engage - Empower - Enrich

In Collaboration with

USAID
FROM THE AMERICAN PEOPLE

WCIC
மேன்மைக்கு கௌரவம்
Women Entrepreneur Awards 2024
வலுவூட்டல் AIA INSURANCE

# WCIC மகளிர் தொழில்முனைவோர் விருதுகள் 2024

WCIC
Women's Chamber of Industry and Commerce
Engage • Empower • Enrich

WCIC
மேன்மைக்கு கௌரவம்
Women Entrepreneur Awards 2024
வலுவூட்டல் AIA INSURANCE

ம.தொ.வ.ச “பிரதிபாபிஷேக” என்பது மகளிர் தொழில்முனைவோரை அங்கீகரித்து வெகுமதி அளிக்கும் நோக்கத்துடன் நடத்தப்படும் மகளிர் தொழில் மற்றும் வர்த்தக சம்மேளனத்தால் (ம.தொ.வ.ச) ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு முதன்மையான மகளிர் தொழில்முனைவோர் விருதாகும்.

**எமது நோக்கம்**
தேசத்தின் பொருளாதார வளர்ச்சியை மாற்றியமைப்பதில் பங்கேற்பதன் மூலம் சக்தி வாய்ந்த தேசத்தைக் கட்டியெழுப்பும் பெண்களை மேம்படுத்தும் ‘சிந்தனையாளர்’ ‘குரல்’ மற்றும் ‘தளம்’ ஆக திகழ்தல்.

**எங்கள் பணி**
இலங்கையில் பெண்களின் எதிர்காலத்தை வடிவமைத்தல் மூலம்:
- தொழில் மற்றும் தொழில் முன்னேற்றத்திற்கான வாய்ப்புகள்
- மதிப்புமிக்க தொடர்புகளை வளர்த்தல்
- அவர்களின் முழு திறனை அடைவதற்கு வலுவூட்டல்
- உறுப்பினர் வெற்றியை எளிதாக்குதல்

இலங்கையில் மகளிருக்கான **தேசிய சம்மேளனமாக** பின்பற்றப்படும் மூலோபாய வழிகாட்டலுக்கு இணங்க மகளிர் தொழிற்துறை மற்றும் வர்த்தக சம்மேளனம் **“2024 ஆம் ஆண்டுக்கான மகளிர் தொழில்முனைவோர் விருதுகளை”** மீண்டும் தொடங்கவுள்ளது, இது இன்றைய சூழலை இணைக்கும் வகையில் விண்ணப்பதாரர்கள் தங்கள் வணிகங்களை திறம்பட வெளிப்படுத்த உதவும்.

மேலும் ஏதேனும் தெளிவுபடுத்தல் விண்ணப்பதாரருக்குத் தேவைப்படும்போது, உதவிக்காக மகளிர் தொழில் மற்றும் வர்த்தக சம்மேளனத்துக்கு அனுப்பப்பட வேண்டும். உங்கள் பங்கேற்பை எளிதாக்குவதற்கு விரைவான மற்றும் பயனுள்ள உதவியை வழங்க நாங்கள் தயாராக உள்ளோம்.


இலங்கை மகளிர் தொழிற்துறை மற்றும் வர்த்தக சம்மேளனம்
இல.380/110, சரண வீதி, பௌத்தாலோக்க மாவத்தைக்கு அருகாமையில்,
கொழும்பு 07, இலங்கை.

தொலைபேசி : +94 11 2 671 762, +94 766 848 080

மின்னஞ்சல்: wcicsl1@sltnet.lk/wcicsrilanka@gmail.com

ம.தொ.வ.ச பிரதிபாபிஷேகா - மகளிர் தொழில்முனைவோர் விருதுகள் 2024


| | |
|---|---|
| நோக்கம் | 04 |
| தகுதி | 04 |
| செயல்திறன் மதிப்பீட்டின் காலம் மற்றும் தேவையான ஆவணங்கள் | 05 |
| எனது கதை | 05 |
| நிதி மற்றும் மேலாண்மை | 06 |
| நேர்காணல் | 07 |
| விருது வகைகள் மற்றும் வரையறை | 08 |
| பிராந்திய விருதுகள் | 09 |
| சிறப்பு விருதுகள் | 10 |
| விருதுகளுக்கு விண்ணப்பம் செய்தல் | 11 |
| நுழைவு கிட்/விண்ணப்பக் கட்டணம் | 12-16 |

WCIC
Women's Chamber of Industry and Commerce
Engage • Empower • Enrich

WCIC
மேன்மைக்கு கௌரவம்
Women Entrepreneur Awards 2024
வலுவூட்டல் AIA INSURANCE

**நோக்கம்**

- இலங்கையின் மகளிர் தொழில்முனைவோர் இந்த சவாலான காலங்களில் அளவிடுவதற்கும் வளர்ச்சியடைவதற்கும் அவர்களின் உறுதியான தன்மைக்காகவும் சமூகம் மற்றும் பொருளாதாரத்தில் அவர்கள் ஏற்படுத்தும் நேர்மறையான தாக்கத்திற்காகவும் ம.தொ.வ.ச இலங்கை மகளிர் தொழில்முனைவோரை கௌரவிப்பார்கள்.

- சிறந்த பெண்களை அங்கீகரித்து வெகுமதி அளிப்பது, அவருக்கும் இலங்கையிலுள்ள பெண்களின் வர்த்தக சமூகத்திற்கும் ஒரு உந்துதலாக செயல்படுவது, சந்தை அணுகலைப் பெறுவதற்கும், மற்றவர்கள் பின்பற்றுவதற்கு சிறந்த நடைமுறைகளை அமைத்துக் கொள்வதற்கும் அவர்களது வியாபாரத்தை மேம்படுத்தவும் உதவுகிறது.

- வெற்றிகரமான/ஏற்கப்படாத விண்ணப்பதாரர்களுக்கு அவர்களின் வணிக முயற்சியை அளவிடுவதற்கும் அவர்களின் மதிப்பை அதிகரிப்பதற்கும் அவர்களை ஊக்குவிக்க/ஆதரவளிக்க பயனுள்ள வழிகாட்டுதலை வழங்குதல்.

**தகுதி**

- ஒரு பெண்ணுக்குச் சொந்தமான பெரும்பான்மையுடன் கூடிய எந்தவொரு பதிவுசெய்யப்பட்ட வணிக நிறுவனமும் → 51% (உ+ம்: தனியுரிமை, பங்குதாரர், தனியார் அல்லது பொது வரையறுக்கப்பட்ட பொறுப்பு நிறுவனம் போன்றவை.)

  - 51% உரிமைப் பங்கு - இலங்கை SAARC / பெண்கள்
  - 100% பெண்களுக்கு உரிமையானதில் 1/3 - இலங்கை/SAARC பெண்கள்
  - 1/3 இலங்கை/SAARC பெண்களுக்கு உரித்தான குறிப்பிட்ட முகாமைத்துவ கட்டுப்பாட்டுடன் (தலைவர், நிர்வாக இயக்குனர், CEO மற்றும் முகாமைத்துவ இயக்குனர்)
  - தேசியமல்லாத ஒருவரெனில், (இலங்கையில் வசிப்பவர்/இரட்டைப் பிரஜாவுரிமை கொண்டவர்) வியாபாரப் பதிவுடன், 5 வருடங்களாக வியாபாரத்தைக் கொண்டு நடாத்துவதாயின் தகுதிபெறுவர்.

- சட்டப்பூர்வ நிறுவனங்கள் அல்லாத நிறுவனங்கள் தகுதியானதாகக் கருதப்படாது.

- கணக்காய்வாளர்களால் சான்றளிக்கப்பட்ட ஆவணச் சான்றுகள், வணிகம், தயாரிப்புகள், சேவைகள் தொடர்பான செயல்திறனை உறுதிப்படுத்துவதற்குத் தேவைப்படும். (ஸ்டார்ட்அப் மற்றும் மைக்ரோ வகைகளுக்கு கட்டாயமில்லை).

- புதுப்பிக்கப்பட்ட செயல்முறை எளிமையானது ஆனால் பிரிவுகள் தொடர்பான தகவல்கள் உள்ளடக்கப்படவில்லை என்றால் உங்கள் விண்ணப்பம் நிராகரிக்கப்படலாம்.

**செயல்திறன் மதிப்பீட்டின் காலம் மற்றும் தேவையான ஆவணங்கள்**

இந்த விருதுகளுக்கான நிதியாண்டு காலம் 2023/2024 ஐ உள்ளடக்கியது. இருப்பினும், தரவை வழங்கும் போது குறைந்தபட்சம் இரண்டு வருடங்கள் (ஐந்து வரை) கடந்தகால செயல்திறன் எதிர்பார்க்கப்படும்.

செயல்முறை 03 படிகளை உள்ளடக்கியதாக இருக்கும்:
1. “எனது கதை”
2. நிதி மற்றும் நிர்வாகம்
3. நடுவர்களுடன் நேர்காணல் (விண்ணப்பங்களுக்கு மட்டும்)

“எனது கதை”

விண்ணப்பதாரர் பின்வரும் மாதிரியை வழிகாட்டுதலாக சமர்ப்பிக்க வேண்டும். ஒவ்வொரு பகுதியும் அதிகபட்சம் 200 வார்த்தைகள். (சொல் எண்ணிக்கையை அதிகரிப்பது தகுதியிழப்பு ஆகும்). “எனது கதை” யின் கீழ் கூறப்பட்ட அனைத்து கூற்றுக்கள் மற்றும் அறிக்கைகளுக்கு நம்பகமான ஆதாரத்துடன் கதை நிரூபிக்கப்பட வேண்டும். இது உங்கள் வணிகம் தொடர்பான நிஜ வாழ்க்கை நிகழ்வுகளை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். வார்த்தை எண்ணிக்கை ஒவ்வொரு அளவுகோலின் கீழ் குறிக்கப்பட வேண்டும். – மொத்தம் 1000 மதிப்பெண்கள் வழங்கப்படும்.

| அளவுகோல்கள் | விபரங்கள் |
|---|---|
| நோக்கம் சார்ந்த வணிகம் (200 மதிப்பெண்கள்) | • உங்கள் வணிகத்தின் நோக்கம் மற்றும் வணிகம் இருப்பதற்கான காரணம் என்ன?<br>• குறிப்பிடப்பட்ட தேவை யாது? மற்றும் எவ்வாறு கவனிக்கப்பட்டது?<br>• செய்யப்பட்ட தர நிலைப்படுத்தல் யாது? மற்றும் உங்கள் இலக்கு நுகர்வோர் யார்?<br>• நீங்கள் யாருடன் போட்டியிடுகிறீர்கள், நீங்கள் எப்படி சிறப்பாக இருக்கிறீர்கள், ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்? |
| தொழில் முனைவோர் மனப்பான்மை (100 மதிப்பெண்கள்) | • உங்கள் பயணத்தில் நீங்கள் எப்படிப் பயணித்தீர்கள்?<br>• உங்கள் தொழிலில் வெற்றி எப்படி இருக்கும்?<br>• நீங்கள் முன்னேறும் போது உங்கள் குழு உந்துதலுடனும், உற்சாகத்துடனும் இருப்பதை எப்படி உறுதி செய்வீர்கள்?<br>• ஒரு சவால் உங்கள் வணிகத்தை எவ்வாறு பாதிக்கிறது? – உதாரணம் - |
| புத்தாக்கம் பற்றிய உங்கள் கவனம் (200 மதிப்பெண்கள்) | • நீங்கள் மேற்கொள்ளும் அடுத்த புதிய விடயம் என்ன?<br>• சந்தைக்கு உங்கள் படைப்பினை அறிமுகப்படுத்தும் முதல் நபர் நீங்களா?<br>• நிறுவனத்தில் படைப்பாற்றல் எவ்வாறு வளர்க்கப்படுகிறது?<br>• புதிய யோசனைகள் எவ்வாறு காக்கப்படுகின்றன, மேலும் எந்த ஆராய்ச்சி உங்களுக்கு ஆதரவளிக்கிறது? |
| மதிப்பை உருவாக்குதல் (200 மதிப்பெண்கள்) | • உங்களுக்கும் உங்கள் குழுவிற்கும் எப்படி மதிப்பை உருவாக்குவீர்கள்?<br>• பங்குதாரர்களுக்கான மதிப்பை எப்படி உருவாக்குவீர்கள் (ஏதேனும் இருந்தால்)?<br>• உங்கள் குழுவை வளரச் செய்வதற்கும் தக்கவைப்பதற்கும் என்ன முதலீடுகள் செய்யப்படுகின்றன?<br>• எது உங்களைத் தடுத்து நிறுத்துகிறது? |
| உள்நாட்டு மற்றும் உலகளாவிய சந்தைகளில் உங்கள் பங்களிப்பு (100 மதிப்பெண்கள்) | • உங்கள் தற்போதைய அணுகல் என்ன? - ஊடுருவல் மற்றும் மதிப்பு<br>• என்ன விரிவாக்கங்கள் திட்டமிடப்பட்டுள்ளன (ஏதேனும் இருந்தால்)?<br>• நீங்கள் ஏற்றுமதி செய்கிறீர்களா? இல்லையென்றால், உங்களைத் தடுத்தது எது?<br>• அந்தப் பகுதிக்குள் நுழைய ஏதேனும் திட்டம் உள்ளதா? |
| மூலோபாய திசை (200 மதிப்பெண்கள்) | • உங்கள் வணிகம் எதிர்காலத்தில் எங்கு இருக்க வேண்டும் என்று விரும்புகிறீர்கள்?<br>• உங்களிடம் தெளிவான பாதை உள்ளதா? அது எப்போது நடக்கும்? யாரால் என்ன செய்யப்படும்? |

**நிதி மற்றும் நிர்வாகம்**

கணக்காய்வாளரால் ஆதரிக்கப்பட்ட / சான்றளிக்கப்பட்ட அனைத்து தொடர்புடைய ஆவணங்களும் பின்வரும் தகவலை உறுதிப்படுத்துவதற்குத் தேவைப்படும்.

| அளவுகோல்கள் | விபரங்கள் |
|---|---|
| நிதி மதிப்பை உருவாக்குதல் 200 | • ஆண்டுக்கு ஆண்டு விற்பனை வளர்ச்சி (5 ஆண்டுகள்/பொருத்தமானது)<br>• CAGR's (குறைந்தபட்சம் 2 ஆண்டுகள், சிறந்த 5 ஆண்டுகள்)<br>• வரிக்கு முந்தைய இலாபம்/நஷ்டம் (குறைந்தபட்சம் 2 ஆண்டுகள்)<br>• பங்குதாரர் சமபங்கு<br>• கணக்கிடப்படுவோர் எண்ணிக்கை |
| ஆளுகை 100 | • பொருத்தமான சபை அல்லது அதற்கு சமமானவை<br>• திட்டமிடப்பட்ட கூட்டங்கள் |
| திறன் மேம்பாடு 100 | • பணியாளர் கலவை-பாலினம்/வயது/தகுதிகள் போன்றவை<br>• ஒரு பணியாளருக்கான ஆண்டு செலவு<br>• வளர்ச்சிக்கான முதலீடு |
| விரிவாக்கம் 100 | • மூலோபாய வளர்ச்சித் திட்டங்கள்<br>• ஏற்றுமதி சாத்தியம் |

தணிக்கை செய்யப்பட்ட கணக்குகள் விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும், தொடக்க, மைக்ரோ கணக்குகள் தணிக்கை செய்யப்படவில்லை என்றால், தகுதிவாய்ந்த கணக்காளரால் சான்றளிக்கப்பட்ட கணக்குகள் போதுமானதாக இருக்கும்.

**விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்களின் பட்டியல்**

- தே.அ.அ./கடவுச் சீட்டின் பிரதி
- வணிகப் பதிவின் பிரதி
- பங்குச் சான்றிதழ்/படிவம் 15
- 21/22, 22/23, 23/24 இற்கான தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளின் சான்றளிக்கப்பட்ட பிரதிகள்(தொடக்க மற்றும் நுண்ணியளவு வகையினர் தணிக்கை செய்யப்பட்ட கணக்குகள் கிடைக்கவில்லை என்றால், சான்றளிக்கப்பட்ட கணக்குகளை கையளிக்க வேண்டும்)
- நுழைவுக் கட்டணச் செலுத்தலின் உறுதிப்படுத்தல் - பணப்பரிமாற்றல் அல்லது காசோலை சீட்டு
- முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம்
- சுயவிவரப் படம்
- நிறுவனத்தின்/வர்த்தக நாமத்தின் இலச்சினை

**தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கான நேர்காணல்**

கீழ்க்கண்ட வழிமுறையை நடுவர்கள் பின்பற்றுவார்கள்.

| அளவுகோல்கள் | விபரங்கள் |
|---|---|
| தொழில் முனைவோர் ஆர்வம் 200 | • தன் கதையை சுருக்கமான முறையில் பகிர்தல்<br>• உங்கள் தொழிலைத் தொடங்க உங்களைத் தூண்டியது எது?<br>• சந்தையில் என்ன தேவைகளை பூர்த்தி செய்ய முயற்சித்தீர்கள்?<br>• போட்டியாளர்களிடமிருந்து உங்களை தனித்து நிற்க வைப்பது எது? |
| ஆளுமை மற்றும் தனிப்பட்ட வர்த்தக நாமம் - 100 | • ஆளுமை மற்றும் விளக்கக்காட்சி |
| சிந்தனை - 200 | • கேள்விகளுக்கு தெளிவாகவும் சுருக்கமாகவும் பதிலளிக்கும் திறன் |
| உலகளாவிய பதிவுகள் - 250 | • உலகளாவிய நடைமுறைப் பங்களிப்பும் எதிர்காலத் திட்டங்களும் |
| பொருளாதார பங்களிப்பு - 250 | • இலங்கையின் பொருளாதாரத்திற்கு சேர்க்கப்பட்ட பெறுமதிகள் |

- ஒரு விண்ணப்பதாரர் செயல்முறைக்கு முழுமையாக சீரமைக்கப்பட வேண்டும். விளக்கக்காட்சியில் படைப்பாற்றல் வரவேற்கத்தக்கது ஆனால் தேவையான அனைத்து தகவல்களும் பெறப்படல் வேண்டும்.

- சமர்ப்பிக்கப்பட்ட தகவல் உண்மையாகவும், மதிப்பிடப்படும் வணிகத்திற்குப் பொருத்தமாகவும் இருக்க வேண்டும் மற்றும். இதற்கு கணக்காய்வாளர்கள் ஒப்புதல் அளிக்க வேண்டும்.

WCIC
Women's Chamber of Industry and Commerce
Engage • Empower • Enrich

WCIC
மேன்மைக்கு கௌரவம்
Women Entrepreneur Awards 2024
வலுவூட்டல் AIA INSURANCE

## விருது வகைகள் மற்றும் விளக்கம்

| வகைகள் | விளக்கம் |
|---|---|
| * தொடக்கம் | புதிய நுழைவு - 5 ஆண்டுகளுக்கு குறைவாக |
| நுண்ணியளவு | ஆண்டு வருமானம் ரூ. 5 மில்லியனுக்கும் குறைவானது |
| சிறியளவு | ஆண்டு வருமானம் 5 – 50 மில்லியன் வரை |
| நடுத்தர அளவு | ஆண்டு வருமானம் 51 – 250 மில்லியன் வரை |
| பாரியளவு | ஆண்டு வருமானம் 251 மில்லியனுக்கு மேல் |
| சார்க் பிராந்தியம் | பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்ட ஆண்டு வருமானம் கொண்ட பிராந்தியத்தைச் சேர்ந்த விண்ணப்பதாரர்கள்<br>நடுத்தர அளவு (அ.டொ. 175,000 – அ.டொ. 830,000 வரை)<br>பாரியளவு (அ.டொ. 830,000 க்கு மேல்) |

* வெற்றிகரமான 'ஸ்டார்ட்-அப்கள்' எனும் தொடக்க நிறுவனம், இன்னும் 5 ஆண்டுகளுக்குள் செயல்பட்டாலும், பிற வகைகளின் வருவாய்த் தேவைகளுக்கு இணங்க, தொடர்புடைய வருவாய் பிரிவின் கீழ் விண்ணப்பிக்க வேண்டும். அத்தகைய விண்ணப்பங்கள் 'ஸ்டார்ட்-அப்' இன் கீழ் பெறப்பட்டால், (ம.தொ.வ.ச) அவை பொருத்தமான வகையின் கீழ் மாற்றப்படும்.

நடுத்தர அளவு மற்றும் பாரியளவு வகைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள், நேர்காணலுக்கு முன் நியமிக்கப்பட்ட குழுவால் பார்வையிடப்படலாம்.


WCIC
Women's Chamber of Industry and Commerce
Engage • Empower • Enrich

WCIC
மேன்மைக்கு கௌரவம்
Women Entrepreneur Awards 2024
வலுவூட்டல் AIA INSURANCE

**பிராந்திய விருதுகள்**

அனைத்து மாகாணங்களிலிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரர்கள் எந்த மாகாணத்தின் கீழும் போட்டியிட அனுமதிக்கப்படுவார்கள், அதில் அவர்கள் 'பிராந்தியத்தின் சிறந்த விருது' பெறுவார்கள், அதன் பிறகு தேசிய விருதுகளுக்கு பரிசீலிக்கப்படுவார்கள். பிராந்திய விருதுகளுக்கு, வகைப்பாடு பொருந்தாது ஆனால் தேசிய விருதுகளுக்கு பரிசீலிக்கப்படும் போது அது பொருந்தும்.

| மாகாணம் |
| --- |
| மேற்கு |
| வட மேற்கு |
| தெற்கு |
| சப்ரகமுவ |
| மத்திய |
| ஊவா |
| கிழக்கு |
| வட மத்திய |
| வடக்கு |



**சிறப்பு விருதுகள்**

இந்த நிகழ்வில் 10 முக்கிய அம்சங்கள் உள்ளன. பெறப்பட்ட சிறந்த மதிப்பெண்களின் அடிப்படையில் விருதுகள் தேர்வு செய்யப்படும்.

| **சிறப்பு விருதுகள்** |
|---|
| **ஆண்டின் சிறந்த மகளிர் தொழில் முனைவாளர் - 2024** |
| ஆண்டின் சிறந்த SAARC மகளிர் தொழில் முனைவாளர் 2024 |
| ஆண்டின் மிகச் சிறந்த ஏற்றுமதி சார்ந்த மகளிர் தொழில் முனைவாளர் 2024 (உற்பத்திகள் மற்றும் சேவைகள்) |
| ஆண்டின் சிறந்த டிஜிட்டல் மகளிர் தொழில் முனைவாளர் 2024 |
| ஆண்டின் புத்தாக்கத்திற்கான மகளிர் தொழில் முனைவாளர் 2024 |
| ஆண்டின் இளம் மகளிர் தொழில் முனைவாளர் 2024 |
| ஆண்டின் துணிச்சல்மிகு மகளிர் தொழில் முனைவாளர் 2024 |
| ஆண்டின் சிறந்த தொடக்க நிலை மகளிர் தொழில் முனைவாளர் 2024 |
| ஆண்டின் சமூக அர்ப்பணிப்புமிக்க மகளிர் தொழில் முனைவாளர் 2024 |

WCIC
Women's Chamber of Industry and Commerce
Engage • Empower • Enrich

WCIC
மேன்மைக்கு கௌரவம்
Women Entrepreneur Awards 2024
வலுவூட்டல் AIA INSURANCE

**விருதுகளுக்கு விண்ணப்பித்தல்**
உங்கள் சமர்ப்பிப்புக்கு பின்வருபவை உரித்தாகும்.

| | |
|---|---|
| **மொழிகள்** | விண்ணப்பங்களை ஆங்கிலம், சிங்களம் அல்லது தமிழ் மொழிகளில் சமர்ப்பிக்கலாம். |
| **விண்ணப்பம்** | விண்ணப்பத்தினை ஆதாரங்களுக்கான அச்சுப் பிரதிகளை இணைத்து சமர்ப்பிக்கலாம். நேர்காணலின் போது அசல் ஆவணங்களைக் கொண்டு செல்வதுடன், சமர்ப்பிக்கும்போது அவற்றின் பிரதிகளையும் இணைக்க வேண்டும். |

**நுழைவு கிட்/விண்ணப்பக் கட்டணம்**
நுழைவு கிட் மற்றும் வழிகாட்டுதல்களை www.wcicsl.lk என்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விருதுகளுக்கான விண்ணப்பங்கள் ஆவணங்களுடன் (இணைக்கப்பட்டு முறையாக குறியிடப்பட்டவை) ஸ்கேன் செய்யப்பட்டு, மின்னஞ்சல் ஊடாக அனுப்பப்பட வேண்டும். அல்லது அதன் கடின நகலை (விண்ணப்பம் மற்றும் துணை ஆவணங்கள்) ***சீல் செய்யப்பட்ட கவரில்*** சீ.இ.ஓ என பெயர் குறிப்பிடப்பட்டு, மகளிர் தொழிற்துறை மற்றும் வர்த்தக சம்மேளனம், இல.380/110, சரண வீதி, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 07 என்ற முகவரிக்கு, தொடர்புடைய கட்டணத்துடன் 2024 ஒக்டோபர் 31 அல்லது அதற்கு முன் ஒப்படைக்கப்பட வேண்டும். விருது வழங்கும் விழா 2025 ஜனவரியில் திட்டமிடப்படும்.

**குறிப்பு:** சமர்ப்பித்த திகதியானது ஒன்லைன் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்ட திகதியாகக் கருதப்படும் மற்றும் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தின் கடின நகலை, கட்டண இரசீதுடன், நிர்ணயிக்கப்பட்ட விண்ணப்பச் சமர்ப்பிப்பு காலக்கெடுவிற்கு இணங்க, சேம்பரிடம் ஒப்படைக்க வேண்டும்.

| பிரிவுகள் | சேம்பர் அங்கத்தவர்கள் (ரூ) | அங்கத்தவர்கள் அல்லாத (ரூ) |
|---|---|---|
| தொடக்கம் | ரூ.500/- | ரூ.1,000/- |
| நுண்ணியளவு | ரூ.1,000/- | ரூ.1,500/- |
| சிறியளவு | ரூ.3,000/- | ரூ.4,000/- |
| நடுத்தர அளவு | ரூ.7,500/- | ரூ.8,500/- |
| பாரியளவு | ரூ.10,000/- | ரூ.12,500/- |
| SAARC பிராந்தியம் | - | $ 50 |

"தொழில்துறை மற்றும் வர்த்தக மகளிர் சம்மேளனம் இலங்கை" க்கு ஆதரவாக வரையப்பட்ட காசோலை மூலம் செலுத்த வேண்டிய பணம் "A/C பணம் பெறுபவர் மட்டும்". விண்ணப்பக் கட்டணம் திருப்பிச் செலுத்தப்படமாட்டாது. ஒன்லைன் பரிமாற்றங்கள் சாத்தியமாகும், மேலும் விண்ணப்பச் சமர்ப்பிப்புடன் பரிமாற்றச் சீட்டை இணைக்க வேண்டும்.

**கணக்கின் பெயர்: மகளிர் தொழிற்துறை மற்றும் வர்த்தக சம்மேளனம்**
**கணக்கு எண்: 055010125721**
**வங்கியின் பெயர்: ஹட்டன் நெஷனல் வங்கி**
**கிளை: பொரளை**

மேலதிக தகவல்களுக்கும் விசாரணைகளுக்கும், 0112671762 என்ற எண்ணில் அலுவலக செயலகத்தை அல்லது பிரதான நிறைவேற்று அதிகாரியை தொடர்பு கொள்ளவும் அல்லது wcicsl1@sltnet.lk/ wcicsrilanka@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் செய்யவும்.

# SECTION 01

WCIC
Women's Chamber of Industry and Commerce
Engage - Empower - Enrich

WCIC
மேன்மைக்கு கௌரவம்
Women Entrepreneur Awards 2024
வலுவூட்டல் AIA INSURANCE

## தனிநபர் தகவல்

**தொழில்முனைவோரின் பெயர்/பதவி** : ______________________

______________________

**தே.அ.அ. இல./கடவுச்சீட்டு இல.** : ______________________

**கடவுச்சீட்டின் அளவிற்குரிய புகைப்படம்** :

**வயது/பிறந்த திகதி** : __________ ______________

**விண்ணப்பதாரியின் தொடர்பு விபரங்கள்** : ______________

**நிரந்தர தொ.பே.** : ______________

**கையடக்கத் தொ.பே.** : ______________

**மின்னஞ்சல்** ______________

**மற்றொரு பிரதிநிதியின் பெயர் மற்றும் தொலைபேசி இல.** :

: ______________

______________
**விண்ணப்பதாரியின் கையொப்பம்**

**நிறுவனத்தில் வகிக்கும் தற்போதைய பதவி** :

______________

* **கையளிக்கப்பட்ட ஆவணப் பட்டியலை இணைக்கவும்**

## பொதுத் தகவல்

**நிறுவனத்தின் பெயர்** : ______________________

**நிறுவன முகவரி** : ______________________

**நிறுவனப் பதிவிலக்கம் மற்றும் உருவாக்கப்பட்ட ஆண்டு** : ______________________
**(நிறுவனப் பதிவின் பிரதியை இணைக்கவும்)**

**தற்போதைய பங்குகளின் விவரங்கள்** : ______________________

**(படிவம் 15/சான்றிதழ்கள்):**

**தயாரிப்பு விவரங்கள்** : ______________________
**விண்ணப்பத்தின் கீழ் உள்ளடக்கப்பட்ட சேவைப் பிரிவுகள்**
**நுழைவுப் பிரிவு** : தொடக்கம்/நுண்ணியளவு/சிறியளவு/நடுத்தரளவு/பாரியளவு - SAARC நடுத்தரளவு/பாரியளவு

**சமூக ஊடக லிங்க்** : இணையதளம் ______________ முகநூல் ______________

இன்ஸ்டகிராம் ______________ லிங்க்ட்இன் ______________

**உங்கள் வர்த்தக குறி மற்றும் வர்த்தக நாம இலச்சினையை இணைக்கவும் :**

நீங்கள் தொழில்நுட்ப தொழில்முனைவோரா? ஆம் எனில், என்ன டிஜிட்டல் தயாரிப்புகள்/தீர்வுகளை சந்தையில் அறிமுகப்படுத்தியுள்ளீர்கள்? :
(விவரங்களைத் தனியாக இணைக்கலாம்)
நீங்கள் ஒரு சமூக தொழில்முனைவோரா? ஆம் எனில், நீங்கள் எந்த காரணத்தை ஆதரித்தீர்கள் மற்றும் பெரிய சமூக நலனுக்கான தாக்கத்தை உருவாக்கியுள்ளீர்கள்? : (விவரங்களைத் தனியாக இணைக்கலாம்)

# SECTION 02

WCIC
Women's Chamber of Industry and Commerce
Engage - Empower - Enrich

WCIC
மேன்மைக்கு கௌரவம்
Women Entrepreneur Awards 2024
வலுவூட்டல் AIA INSURANCE

## "என் கதை" (1000 மதிப்பெண்கள்)

இந்தப் பகுதியை பூர்த்தி செய்வதில் வழிகாட்டுதல்களின் கீழ் பட்டியலிடப்பட்டுள்ள விவரங்களைப் பார்க்கவும். உங்கள் கதை முழுமையாக இணங்குவதை உறுதிசெய்யவும்.

| **நிபந்தனை (1000 மதிப்பெண்கள்)** | **விவரங்கள் - (ஒரு பகுதிக்கு அதிகபட்ச சொற்களின் எண்ணிக்கை 200 ஒவ்வொரு பிரிவிலும் சொற்கள் எண்ணிக்கையைக் குறிக்கவும்)** | **இணைப்புக் குறிப்பு மற்றும் பக்க எண்** |
|---|---|---|
| நோக்கம் சார்ந்த வணிகம் (200 மதிப்பெண்கள்) | | |
| தொழில் முனைவோர் மனப்பான்மை (100 மதிப்பெண்கள்) | | |
| புத்தாக்கத்தில் கவனம் (200 மதிப்பெண்கள்) | | |
| மதிப்பை உருவாக்குதல் (200 மதிப்பெண்கள்) | | |

| நிபந்தனை | விவரங்கள் | இணைப்புக் குறிப்பு மற்றும் பக்கம் எண் |
|---|---|---|
| உள்நாட்டு மற்றும் உலகளாவிய சந்தைகளில் தாக்கம் (100 மதிப்பெண்கள்) | | |
| மூலோபாய திசை (200 மதிப்பெண்கள்) | | |

WCIC
Women's Chamber of Industry and Commerce
Engage • Empower • Enrich

WCIC
மேன்மைக்கு கௌரவம்
Women Entrepreneur Awards 2024
வலுவூட்டல் AIA INSURANCE

## நிதி மற்றும் ஆளுகை (500 மதிப்பெண்கள்)

வணிகத்தின் புவியியல் இருப்பு

| | | |
|---|---|---|
| ☐ மேற்கு | ☐ வட மேற்கு | ☐ தெற்கு |
| ☐ சப்ரகமுவ | ☐ மத்திய | ☐ ஊவா |
| ☐ கிழக்கு | ☐ வட மத்திய | ☐ வடக்கு |

SAARC விண்ணப்பங்கள் நாடு .................................................. நகரம்..................................................

மூன்று வருட தணிக்கை செய்யப்பட்ட நிதி அறிக்கைகள் (உத்தரவாத ஆவணங்களை இணைக்கவும்)

☐ 2021/2022 ☐ 2022/2023 ☐ 2023/2024

ஒவ்வொரு ஆண்டு இறுதியிலும் மொத்த பணியாளர்கள்

| 2021/2022 | 2022/2023 | 2023/2024 |
|---|---|---|
| | | |

பணியாளரின் சுருக்கம்: கலவை - பாலினம்/ வயது/தகுதிகள் போன்றவை

பணியாளர் செலவு விபரங்கள், மேற்கொள்ளப்பட்ட வளர்ச்சி

நிர்வாக அமைப்பு:
(இயக்குனர்கள் குழுவின் விவரங்கள்/ வருடத்திற்கு குறைந்தபட்ச கூட்டங்களின் எண்ணிக்கை அல்லது நிர்வாகத்தை மேற்பார்வையிட உதவும் வேறு ஏதேனும் குழுக்கள்)

எதிர்கால விரிவாக்கம், நியாயப்படுத்துதல் மற்றும் உத்திகள்:

இந்தத் தகவலைப் பூர்த்தி செய்வதற்கான வழிகாட்டுதல்களைப் பார்க்கவும். வழிகாட்டுதல்களுக்கு உட்பட்டிருப்பதை உறுதிசெய்யவும்.

| நிபந்தனை | விவரங்கள் | இணைப்புக் குறிப்பு மற்றும் பக்க எண் |
|---|---|---|
| நிதி மதிப்பை உருவாக்குதல் | | |
| ஆளுகை | | |
| திறன் அபிவிருத்தி | | |
| விரிவாக்கம் | | |

நன்றி!

## அனுசரணையாளர்கள்

பிளட்டினம்

டயமன்ட்

(வங்கிப் பங்காளர்)

ஒத்துழைப்புப் பங்காளர்

கோல்ட்

சில்வர்

ப்ரோன்ஸ்

ஊடக பங்காளர்-அச்சு/சமூக ஊடகம்

உத்தியோகபூர்வ இலத்திரனியல் பங்காளர்கள்

அறிவுசார் பங்காளர்

தொடர்பாடல் பங்காளர்

WCIC
Women's Chamber of Industry and Commerce
Engage - Empower - Enrich

WCIC
மேன்மைக்கு கௌரவம்
Women Entrepreneur Awards 2024
வலுவூட்டல் AIA INSURANCE

**மகளிர் தொழிற்துறை மற்றும் வர்த்தக சம்மேளனம் இலங்கை**
இல.380/110, சரண வீதி, பௌத்தாலோக்க மாவத்தைக்கு அருகாமையில்,
கொழும்பு 07, இலங்கை.